
## திராவிடத்தால் வாழ்கிறோம்

1246

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

## ‘மைனாரிட்டி’ தி.மு.க.

**மரு.எஸ்.ஏ.எஸ்.ஹபிசுல்லா**

70

தி.மு.க.வுக்கும் சிறுபான்மையினருக்குமான உணர்வுபூர்வமான உறவையும் உரிமைச் செயல்பாடுகளையும் விவரிக்கும் தொடர்

# ஜி.எம்.ஷா, நாஞ்சில் மாநாட்டில் உயர்ந்த கொடி!



கலைஞருடன் ஜி.எம்.ஷா

தி.மு.கழகத்தில் கடைநிலைத் தொண்டனாகத் தன் அரசியல் வாழ்வைத் தொடங்கி, உயர்நிலைச் செயல்திட்டக்குழு உறுப்பினராக உயர்ந்த உடன்பிறப்பு, ஜி.எம்.ஷா. தமிழ்நாட்டின் கடைசி முனையான குமரியில் பிறந்தவர் என்றாலும், அண்ணாவால் அறியப்பட்டவர், கலைஞரால் அன்போடு அளவலாவப்பட்டவர், கழகத்தின் இன்றைய தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் பேரன்பைப் பெற்றவர்.

கன்னியாகுமரி மாவட்டம், 1956-இல் தமிழ்நாட்டுடன் இணைந்த பிறகு, திராவிட இயக்கத்தை தென் மாவட்டங்களில் வலுப்படுத்தும் பணியில் ஈடுபட்ட தலைமுறையைச் சேர்ந்தவர். குறிப்பாக, நாகர்கோவில் மற்றும் குமரி மாவட்டத்தில் கழகத்தின் வளர்ச்சி, பொதுக்கூட்டங்கள், உறுப்பினர் சேர்க்கை, தேர்தல் பணிகள் போன்றவற்றில் அவரது ஈடுபாடு அளப்பரியது என்பது தென் மாவட்ட வரலாற்றில் முக்கியமானது.

1935-ஆம் ஆண்டு, சூரன்குடி என்ற சிற்றூரில் பிறந்த இவர், படிக்கும்போதே மாணவர் சங்கத் தலைவராகத் திகழ்ந்தார். சுயமரியாதை இயக்கச் சிந்தனைகள் தமிழ்நாட்டில் தீ போல பரவத் தொடங்கியிருந்த அந்தக் காலகட்டத்தில், அதன் தாக்கத்திற்கு உட்பட்டு, திராவிட இயக்கத்திற்கு வந்து சேர்ந்தவர், ஜி.எம்.ஷா. படிக்கும்போதே பெரியார், அண்ணா மீது பெரும் பற்று கொண்டிருந்த இவர், தி.மு.கழகத்தின் தொடக்க காலகட்டத்திலேயே தன்னையும் இணைத்துக்கொண்டார்.

1957-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம், நாஞ்சில் மாவட்டக் கழக 2-வது மாநாடு, நாகர்கோவிலை அடுத்த கிருஷ்ணன்கோவிலில் நடைபெற்றது. அந்த மாநாட்டையொட்டி, நாகர்கோவிலில் கழகப் பொதுக்குழுவும் கூடியது. அதில்தான், ஜனவரி மாதத்தில் தமிழ்நாட்டுக்கு வருகைதரும் பிரதமர் நேருவுக்கு, கருப்புக்கொடி காட்டி எதிர்ப்பைத் தெரிவிப்பது என முடிவு செய்யப்பட்டது.

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த அம்மாநாட்டின் தொண்டர் படைத் துணைத் தலைவராகச் செயல்பட்டவர், ஜி.எம்.ஷா. மாநாட்டு ஊர்வலத்தில் குதிரை மீது ஏறி அமர்ந்து, கழகத்தின் இரு வண்ணக் கொடியைக் கம்பீரமாக உயர்த்திப் பிடித்து வந்தவர், ஜி.எம்.ஷா. அப்போது, அவருக்கு வயது 22.

### இரண்டே ஆண்டுகளில் பொறுப்புகள்

தொடர்ந்து கழகப் பணிகளில் ஈடுபட்டு வந்த அவருக்கு, அடுத்த இரண்டே ஆண்டுகளில் மிக உயரிய பொறுப்பை கழகம் வழங்கியது. கன்னியாகுமரி மாவட்டக் கழகச் செயலாளராக 1959-இல் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டார் ஜி.எம்.ஷா. 1965 ஆம் ஆண்டு முதல் 1990 ஆம் ஆண்டு வரையும், மீண்டும் 1996 முதல் 2001-ஆம் ஆண்டு வரையும் 30 ஆண்டுகள் வடக்கு சூரங்குடி ஊராட்சித் தலைவராகத் தேர்வுசெய்யப்பட்டு மக்கள் நலப் பணியாற்றியவர். 1976-ஆம் ஆண்டு அவசரநிலை காலத்தில் மிசா சட்டத்தில் கைதுசெய்யப்பட்டு, பாளையங்கோட்டைச் சிறையில் இருந்துள்ளார். கழகம் அறிவித்த போராட்டங்களில் எல்லாம் பங்கெடுத்துள்ளார்.

1993-ஆம் ஆண்டு கழகத்தில் நெருக்கடி ஏற்பட்ட சமயத்தில், மாவட்டப் பொறுப்புக் குழுத் தலைவராகவும், 1999-ஆம் ஆண்டு மீண்டும் மாவட்டப் பொறுப்பாளராகவும் இருந்து திறம்படப் பணியாற்றினார். கழகப் பொதுக்குழு, செயற்குழு, சொத்துப் பாதுகாப்புக்குழு, உயர்நிலைச் செயல்திட்டக்குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்துள்ளார்.

இளமைக்காலத்தில் மட்டுமல்ல, முதுமையிலும் இயக்கத்திற்காக அயராமல் உழைத்த தன்னலங்கருதாத கழகத் தொண்டராக வலம் வந்தவர், ஜி.எம்.ஷா. 2008-ஆம் ஆண்டு நடைபெற்ற கழக உள்கட்சித் தேர்தலில் பத்தாவது முறையாகக் கழகத் தலைவராகக் கலைஞர் தேர்ந்தெடுக்கப்பட்டார். கழகப் பொதுச்செயலாளராகப் பேராசிரியர் எட்டாவது முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அப்போது, கழகத்தின் தேர்தல் அதிகாரியாகச் செயல்பட்டவர், ஜி.எம்.ஷா. கலைஞர் - பேராசிரியர் மட்டுமல்ல, அந்தத் தேர்தலில்தான் கழகத்தின் பொருளாளராக இன்றைய கழகத் தலைவர் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

### அமைப்புத் தேர்தல்

தி.மு.க.வின் அனைத்து மட்டங்களிலும் செயல்படும் முறை குறித்தும், மேலும் வலுவாகவும், கட்டுப்பாட்டுடனும் செயல்படுவதற்குரிய கட்சி அமைப்பில் மாற்றங்கள் செய்வதற்காகவும், 2011-ஆம் ஆண்டு கருத்துகள் கேட்கப்பட்டன. ஆயிரக்கணக்கான கடிதங்கள் பல்வேறு பகுதிகளில் இருந்து அனுப்பப்பட்டன. கழகத் தலைமைக்கு வந்திருந்த கடிதங்களை ஆராய்ந்து, அமைப்பு முறைகளை ஒழுங்குபடுத்த, கழக அமைப்பு முறை ஆலோசனைக்குழு அமைக்கப்பட்டது. ஏழு பேர் கொண்ட அந்தக் குழுவில் டி.கே.எஸ். இளங்கோவன், பொன்.முத்துராமலிங்கம், கு.பிச்சாண்டி, முகமது சகி, வி.பி.ராஜன், பாஸ்கர் சுந்தரம் ஆகியோருடன் மூத்த உடன்பிறப்பாக இருந்தவர், ஜி.எம்.ஷா.

2010-ஆம் ஆண்டு, திராவிட முன்னேற்றக் கழகத்தின் முப்பெரும் விழா, நாகர்கோவிலில் நடைபெற்றது. அந்த விழாவில், கலைஞரின் கரங்களால் ‘கலைஞர் விருதை’ப் பெற்றார், ஜி.எம். ஷா. 2011-ஆம் ஆண்டில் அ.தி.மு.க. அரசு அமைந்தவுடன், கழகத்தினர்மீது எண்ணற்ற பொய் வழக்குகள் புனையப்பட்டதைக் கண்டித்து, தி.மு.கழகத்தின் சார்பில் அனைத்து மாவட்டங்களிலும் கண்டன ஆர்ப்பாட்டம் அறிவிக்கப்பட்டது. காவல் துறை அனுமதி தரவில்லை. ஆனால், தமிழ்நாடு முழுவதும் கழகத் தொண்டர்கள் பல்லாயிரக்கணக்கில் ஆர்ப்பாட்டங்களில் பங்கெடுத்தனர். குமரியில், நாகர்கோவில் ஆட்சியர் அலுவலகம் அருகே நடந்த ஆர்ப்பாட்டத்தில் ஜி.எம்.ஷா கலந்துகொண்டு கைதானார்.

இறுதிவரை இயக்கத்திற்காக உழைத்த அந்த உடன்பிறப்பின் இதயம், 2014-ஆம் ஆண்டு ஏப்ரல் இரண்டாம் நாள், நாடாளு மன்றத் தேர்தல் சமயத்தில் நின்றுபோனது. அதற்கு முன்பு, திருவனந்தபுரத்தில் உள்ள தனியார் மருத்துவமனையில் ஜி.எம்.ஷா சிகிச்சையில் இருந்தார். மார்ச் 14-ஆம் தேதி, குமரிக்கு தேர்தல் பிரச்சாரத்திற்குச் சென்றிருந்த இன்றைய கழகத் தலைவர் அவர்கள், மருத்துவமனைக்குச் சென்று ஜி.எம். ஷாவிடம் நலம் விசாரித்தார். இந்நிலையில், அவர் மறைவுக்குப் பிறகு மே 10-ஆம் தேதி, குமரியில் படத்திறப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டு, ஜி.எம்.ஷா உருவப்படத்தைத் திறந்துவைத்து, கழகத்திற்கான அவரது வரலாற்றுப் பங்களிப்பை நினைவுகூர்ந்தார், இன்றைய கழகத் தலைவர். ஜி.எம்.ஷா மறைந்து 12 ஆண்டுகள் ஆனாலும் இன்றும் அவரது நினைவு நாள், பிறந்தநாள்களில் அவரை நினைவு கூர்ந்து வருகிறார்கள், கழகத் தொண்டர்கள்.

> **ஜி.எம்.ஷா மறைந்து 12 ஆண்டுகள் ஆனாலும் இன்றும் அவரது நினைவுநாள், பிறந்தநாள்களில் அவரை நினைவு கூர்ந்து வருகிறார்கள் கழகத் தொண்டர்கள்.**

...நீளும்

### தேசியவாத முகமூடிகளை அறிய...

இந்துத்துவ வலதுசாரி கருத்தியல், ஆட்சி அதிகாரத்தில் அமர்ந்து, இந்தியாவின் சமூக அரசியல் வாழ்வின் ஒவ்வொரு பகுதியிலும் பாதிப்பை ஏற்படுத்திவருவதை அறிவோம். அதன் அரசியல்ரீதியான வளர்ச்சியை விவரிக்கும் சிறுநூல், ‘விளிம்பிலிருந்து மையத்திற்கு–நூற்றாண்டு கால ஆர்.எஸ்.எஸ். உள்ளும் புறமும்’.

ஏறத்தாழ 40-க்கும் மேற்பட்ட இந்திய அளவிலான அமைப்புகளையும், சமூகத்தின் அனைத்துப் பரிணாமங்களுக்கும் ஒரு துணை அமைப்பினையும் கொண்டுள்ள ஆர்.எஸ்.எஸ். குறித்து, ‘ஃப்ரன்ட்லைன்’ ஆங்கில இதழ் 2025-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம், ஒரு சிறப்பிதழ் கொண்டுவந்தது. அந்த அமைப்பின் வரலாற்றையும் நடைமுறைகளையும் பல்வேறு கோணங்களில் விளக்கும் கட்டுரைகள் அதில் இடம்பெற்றன. அந்தக் கட்டுரைகளை மொழிபெயர்த்து, உரிய அனுமதியையும் பெற்று, சிறுநூலாக வெளியிட்டுள்ளது, பாரதி புத்தகாலயம்.

இந்தியாவின் மூன்று உள்நாட்டு அச்சுறுத்தல்கள் என முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள் மற்றும் கம்யூனிஸ்ட்டுகளை அடையாளப்படுத்தும் ஆர்.எஸ்.எஸ், அதை நடைமுறைப்படுத்தும் காலத்தில் வந்து நிற்கிறது. ‘கலாச்சாரப் பெருமை’, ‘பெரும்பான்மை வாதம்’ ஆகிய இரட்டை முகமூடிகளைப் பயன்படுத்தி, அரசியல் அதிகாரத்தைப் பெற மேற்கொள்ளப்பட்ட இந்தத் திட்டமிட்ட பயணத்தை, இந்தச் சிறுநூலில் வாசிக்கலாம். ஆனால், ‘இந்தியா இன்னும் ஒரு இந்துராஷ்டிரமாக மாறிவிடவில்லை. முஸ்லிம்களும் கிறிஸ்தவர்களும் இன்னும் அரசியலமைப்புச் சட்ட உரிமைகளைக் கொண்ட சிறுபான்மையினராகவே இருக்கிறார்கள். மதச்சார்பின்மை, முற்போக்குவாதம், கூட்டாட்சித் தத்துவம் ஆகியவற்றின் ஆன்மா இன்னும் வலிமையாகவே உள்ளது’ என இந்த நூலுக்கான முன்னுரையில் குறிப்பிடுகிறார், ‘ஃப்ரன்ட்லைன்’ ஆசிரியர் வைஷ்ணா ராய். நூல் விலை: ரூ.80.

தொடர்புக்கு: 94445-67935

### ஃப்ளாஷ்பேக்





கே.எஸ்.ஜெயராமன்

### அதிகாலையில் ஒலித்த இசைமுரசு!

1992-ஆம் ஆண்டு, இடைக்கழிநாடு பேரூராட்சியில் உள்ள ஆலம்பறைக் கோட்டையில், நாகூர் ஹனிபா அவர்களின் இன்னிசை நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருந்தோம். அவர் ஊரிலிருந்து புறப்பட்டு வரும் வழியில் வாகனம் பழுதானதால், சரியான நேரத்துக்கு வந்து சேர முடியவில்லை. அதிகாலை 3 மணிக்கு வருகைதந்தவரை வரவேற்றபோது எடுத்த படம். அந்த நேரத்தில் தொடங்கிய இசை நிகழ்ச்சி, காலையில் சூரியன் உதிக்கும் வரை நடைபெற்றது.

**- கே.எஸ்.ஜெயராமன்,**
**முன்னாள் வார்டு உறுப்பினர்,**
**சித்தாமூர் ஒன்றியக் கழகப் பிரதிநிதி,**
**கடப்பாக்கம், செங்கல்பட்டு மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

### கருவூலம்

### தேர்தல் நிதி திரட்ட குழு!

9.9.1956 அன்று, சென்னை ராயபுரம் அறிவகத்தில் கழகச் செயற்குழுக் கூட்டம் நாவலர் நெடுஞ்செழியன் தலைமையில் நடைபெற்றது. சட்டமன்றத் தேர்தலில் கழகம் நேரடியாகப் போட்டியிடுவது என திருச்சி மாநாட்டில் முடிவுசெய்திருந்த நிலையில், தேர்தல் நிதியாக ரூ.5 இலட்சம் திரட்ட செயற்குழு முடிவுசெய்து குழு அமைக்கப்பட்டது. தேர்தல் அறிக்கை தயாரிக்கவும் குழு அமைக்கப்பட்டது.

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by D.Karthikeyan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044 - 45849900